## மாமன்றக் கூட்டம்

| | | |
|---|---|---|
| **கோப்பு எண்** | - | **ந.க.எண் 11782/2019/ எம்.சி. 8** |
| **நாள்** | - | **20.01.2020 காலை 11.00 மணி** |
| **தலைமை** | - | **திரு.ஜெ.ஷ்ரவன்குமார், இ.ஆ.ப.,<br>ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி** |
| **கலந்துகொண்டோர்** | - | **துணை ஆணையர்,<br>அனைத்து துறை தலைமைகள்,<br>அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்** |

---

### பொருள் எண் 1

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கட்டுதல் பணி மேற்கொள்ள அரசு ஆணை எண். G.O(Ms) No.123/MAWS (MC-II) dept நாள்: 03/10/2019–மூலம் ரூ.168.00 கோடி (50%அரசு மானியம் ரூ. 84.00 கோடி மற்றும் மீதமுள்ள 50 % தொகை மாநகராட்சி நிதி ரூ.84.00 கோடி) மதிப்பீட்டில் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நிதி ஆதாரம்:-

ரூ.கோடியில்

| | |
|---|---|
| அரசு மானியம் 50% | ரூ.84.00 |
| மாநகராட்சி நிதி 50% (HUDCO கடனுதவி) | ரூ.84.00 |
| மொத்தம் | ரூ.168.00 |

இப்பணிக்கான மாநகராட்சியின் 50% மதிப்பீட்டுத்தொகையான ரூ.84.00 கோடிக்கு HUDCO நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெறவும் மற்றும் கடனுதவி பெறுவதற்கான அனைத்த ஒப்பந்த ஆவணங்களிலும் ஆணையாளர் கையொப்பம் இடுவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. HUDCO நிறுவனத்திடமிருந்து மாநகராட்சி நேரடியாக கடனுதவி பெறலாம்.
2. கடனுதவி பெறுவதற்கான அனைத்து ஒப்பந்த ஆவணங்களிலும் ஆணையாளர் கையொப்பம் இடலாம்.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 2180/2015/எம்டி4

---

### பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கட்டுதல் பணி மேற்கொள்ள அரசு ஆணை எண். G.O(Ms) No.123/MAWS (MC-II) dept நாள்: 03/10/2019–மூலம் ரூ. 168.00 கோடி (50%அரசு மானியம் ரூ. 84.00 கோடி மற்றும் மீதமுள்ள 50 % தொகை மாநகராட்சி நிதி ரூ.84.00 கோடி) மதிப்பீட்டில் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது மற்றும் முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை –28 அவர்களால் தொழில்நுட்ப அனுமதி எண். ER No.386/2019-20 நாள்.07/11/2019 அன்று பெறப்பட்டது. இதன் அடிப்படையில் மாநகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானம் எண்.358 நாள்.22/11/2019 –ல் மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, கடந்த 18/12/2019 அன்று முதன் முறையாக E Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

1. திரு/ள், ஸ்ரீபதி அசோசியேட்ஸ் பிரைவேட் லிமிடெட், ஈரோடு
2. திரு/ள். P & C Projects Pvt. Ltd, ஈரோடு
3. திரு/ள். விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ், கோவை

மேற்கண்ட மூன்று நிறுவனங்களில் தி/ள். விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ், கோவை நிறுவனம் டேவணித் தொகையினை சமர்ப்பிக்கப்படாததால் அந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை நிராகரிக்கப்பட்டு மற்ற இரு நிறுவனங்களான தி/ள். ஸ்ரீபதி அசோசியிட்ஸ் பிரைவேட் லிமிடெட், ஈரோடு மற்றும் தி/ள். P & C Projects Pvt. Ltd, ஈரோடு தொழில்நுட்ப தகுதி மற்றும் விலைப்புள்ளி அடங்கிய ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது. மேலும், மாநில அளவிலான ஒப்புதல் தொழில்நுட்ப கூராய்வுக் குழு நாள். 09/01/2020 அன்று வழங்கிய அனுமதியின் படி, தொழில்நுட்ப தகுதி பெற்ற மேற்கண்ட இரு நிறுவனங்களின் ஒப்பந்த விலைப்புள்ளி (Financil Bid ) நாள். 09/01/2020 அன்று திறக்கப்பட்டது. ஒப்பந்த விலைப்புள்ளி மதிப்பீட்டு தொகையின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் கீழ்கண்டவாறு,

<u>ஒப்புநோக்கு பட்டியல் விபரம்</u>

| வ. எண் | நிறுவனம் | மதிப்பீடு (ரூ. கோடி**யில்**) | ஒப்பந்த மதிப்பு (ரூ. கோடி**யில்**) | மதிப்பீட்டு தொகைக்கு அதிகம் |
|---|---|---|---|---|
| 1. | தி/ள், ஸ்ரீபதி அசோசியிட்ஸ் பிரைவேட் லிமிடெட், ஈரோடு | 168.00 | 157.00 | (ரூ.172,49,95,030.79) மதிப்பீட்டிற்கு 9.87 % அதிகம் |
| 2. | M/s. P & C Project Pvt Ltd, ஈரோடு | 168.00 | 157.00 | (ரூ.169,32,68,754.07) மதிப்பீட்டிற்கு 7.85 % அதிகம் |

மேற்கண்ட, இரு நிறுவனங்களில் ஒப்பந்த விலைப்புள்ளி ஒப்பிடுகையில் தி/ள். P & C Project Pvt. Ltd, ஈரோடு நிறுவனம் மாநகராட்சியின் கோரிக்கையின் படி விலை குறைப்பு செய்த பின்னர் வழங்கிய விலை விபரங்கள் கீழ்கண்டவாறு,

| வ. எண் | நிறுவனம் | விலை குறைப்பிற்கு முன் (ரூ.) | மதிப்பீட்டு தொகைக்கு அதிகம் | |
|---|---|---|---|---|
| | | | விலை குறைப்பு நாள் | விலை குறைப்பிற்கு பின் (ரூ.) |
| 1. | தி/ள். P & C Project Pvt. Ltd, ஈரோடு | (ரூ.169,32,68,754.07) மதிப்பீட்டிற்கு 7.85 % அதிகம் | முதல் விலைப்புள்ளி குறைப்பு செய்த நாள்.09/01/2020 | (ரூ.167,38,76,918.28) முதலாம் விலை குறைப்பு (6.62 % அதிகம்) |
| | | | இரண்டாம் விலைப்புள்ளி குறைப்பு செய்த நாள்.13/01/2020 | (ரூ.164,81,20,950.86) இரண்டாம் விலை குறைப்பு (4.98 % அதிகம்) |

எனவே, மேற்படி பணிக்கு தி/ள். P & C Project Pvt. Ltd, ஈரோடு ஒப்பந்த நிறுவனத்தினால் இறுதியாக வழங்கப்பட்ட விலைப்புள்ளி தொகை ரூ. 164,81,20,951/– க்கு (ரூபாய் நூற்றி அறுபத்தி நான்கு கோடியே எண்பத்தியொன்று இலட்சத்து இருபதாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது ஒன்று மட்டும்)–க்கு பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:</u> அனுமதிக்கலாம் ந.க.எண். 2180/2015/எம்டி4

---

**பொருள் எண் 3**

**பொருள்:** சுகாதார பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலம் - வார்டு எண்.51 – காந்திபுரம் 9வது வீதி கதவு எண்.292 என்ற முகவரியில் வசித்து வரும் திரு. மாணிக்கவாசகம் என்பவருக்கு சொந்தமான வீட்டில் கழிவு நீா் தொட்டியை சுத்தம் செய்த போது விஷ வாயு தாக்கி உயிரிழந்த திரு.மகேந்திரன் த/பெ. பத்ரன் அவா்களின் மனைவி திருமதி.கார்த்திகா அவா்களுக்கு இழப்பீடு தொகை ரூ.10,00,000/- வழங்குவதற்கு – அனுமதி வேண்டுதல் தொடா்பாக.

**பார்வை:**
1) மாண்பமை உச்ச நீதிமன்ற வழக்கு எண்.W.P.(Civil) No.583/2003 பொது உத்திரவு நாள்.27.03.2014–ன்படி கழிவுநீா் சுத்தம் செய்யும்பொழுது உயிரிழந்த திரு.மகேந்திரன் த/பெ. பத்ரன் அவா்களின் மனைவி திருமதி.கார்த்திகா அவா்களுக்கு இழப்பீடு தொகை ரூ.10,00,000/- வழங்க கோரி சென்னை உயா் நீதிமன்றத்தில் தொடா்ந்த நீதிப்பேராணை மனு எண். W.P.No.25875/2018 நிலுவை.
2) மாவட்ட ஆட்சியா் அவா்களின் கடித எண்.ந.க.19348/2018/கே1 நாள்.27.11.2018.
3) Mr.Jagdish Hiremani, Member National Commission for Safari Karamcharis, Government of India New Delhi letter dated. 16.12.2018 addressed to District Collector Coimbatore.
4) Private Secretary to member, National Commission for Safari Karamcharis, Government of India, New Delhi D.O.No.12011/M(JH)/251/2018 NCSK letter dated 02.01.2019 addressed to District Collector Coimbatore.
5) மாவட்ட ஆட்சித்தலைவா் அவா்களின் கடித எண்.4988/2019/கா4 நாள்.22.11.2019.
6) மாவட்ட ஆதிதிராவிடா் மற்றும் பழங்குடியினா் நல அலுவலா் அவா்களின் கடிதம் ந.க.எண்.4988/2019/கா4 நாள்.10.10.2019.
7) திரு.R.சிவக்குமாா் மாநகராட்சி வழக்கறிஞா் அவா்களின் கடித நாள்.21.12.2019.
8) தடவியல் துறையின் பிரேத பரிசோதனை (Post mortom final report) இறுதி அறிக்கை நாள்.14.12.2018.

----------

கோயம்புத்தூா் மாவட்டம், கோயம்புத்தூா் வடக்கு வட்டம் காளப்பட்டி கிராமம், ஏரோட்ரூம், நேரு நகா் பள்ளி வீதியில் வசித்து வரும் திருமதி கார்த்திகா என்பவா் தனது கணவா் திரு.மகேந்திரன் என்பவா் கோயம்புத்தூா் மாநகராட்சியில் தினக்கூலி துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்ததாகவும் கடந்த 28.06.2018 அன்று கோயம்புத்தூா், இரத்தினபுரி பகுதியில் உள்ள கேரள சமாஜத்திற்கு எதிரே உள்ள குடியிருப்பில் செப்டிக் டேங் சுத்தம் செய்த போது விஷவாயு தாக்கி இறந்துவிட்டது தொடா்பாக இரத்தினபுரி காவல் நிலைய குற்ற எண்.773/2018 u/s 284,304(A) IPC PROHIBITION OF EMPLOYMENT AS MANUAL SCAVENGER 2 THEIR REHABILITAION ACT -2013 7,9-ன் படி பார்வை (1)–ல் கோயம்புத்தூா் மாவட்ட ஆட்சியா் மற்றும் மாநகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சோ்த்து சென்னை உயா்நீதிமன்றத்தில் ரிட் மனு W.P.No.25875/2018 தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது மாநகராட்சி சார்பில் எதிர்வாதுரை தயாா் செய்து சென்னை உயா்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பார்வை (2)-ல் காணும் கடிதத்தில் வழக்கிற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட ஆவணங்களை அனுப்பி வைக்குமாறு கோரி மாவட்ட ஆட்சியா் தலைவா் அவா்களின் கடிதம் பெறப்பட்டது. எதிர்வாதுரை நகல் கடந்த 14.12.2019 தேதியில் மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்களுக்கு அனுப்பப்பட்டது.

பார்வை (8)-ல் காணும் பிரேத பரிசோதனை (Post Mortom) இறுதி அறிக்கையில் (Asphyxia due to entry of drainage material into Respiratory tract. The viscera does not contain any poison) என குறிப்பிடப்பட்டுள்ளது.

பார்வை (3) மற்றும் பார்வை (4)-ல் காணும் கடிதத்தில் நிவாரண நிதியாக ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) சம்பந்தப்பட்ட நபருக்கு வழங்க நடவடிக்கை எடுத்து அதற்கான ஆவணங்களை வழங்குமாறு மாவட்ட ஆட்சியா் அவா்களுக்கு தேசிய தாழ்த்தப்பட்டோா் ஆணையம் (SC/ST Commission) தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை (1)-ல் காணும் மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் பொதுவான உத்தரவின்படியும் மற்றும் பார்வை (3)-ல் காணும் தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் Mr.Jagdish Hiremani, Member National Commission for Safari Karamcharis, Government of India New Delhi அவர்களின் பரிந்துரை கடிதத்தின்படி இறந்தவர் திரு.மகேந்திரன் அவர்களின் மனைவி திருமதி.கார்த்திகா அவர்களுக்கு ரூ.10,00,000/- (ரூபாய் பத்து லட்சம்) நிவாரணம் வழங்க ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் ஒப்புதலுடன் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.25875/18/E2(CZ)

---

## பொருள் எண் 4

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியினை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 24-க்குட்பட்ட காந்தி பூங்கா ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி ந.க.எண்.8658/2019/எம்.டி.2 | 70.00 | ம.தீஎண் 166 நாள். 28.08.19 | 17.10.19 முதலாம் அழைப்பு | 1).திரு.ஆர்.ராஜன் 0.82% குறைவு<br>2).திரு.கே. முருகேசன் 0.55% குறைவு | திரு.ஆர்.ராஜன் 0.82% குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணியின் ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.8658/2019/எம்.டி.2

---

## பொருள் எண் 5

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சியின் இணைக்கப்பட்ட பகுதிகளில் பவானி நதியை நீர் ஆதாரமாக கொண்டு குடிநீர் விநியோக வளர்ச்சி திட்டம் – பில்லூர் III - AMRUT திட்டத்தின் கீழ் மதிப்பீட்டுத் தொகை ரூ. 740.15 கோடியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல் படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டு தொகையில் நிதி ஆதாரம் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB)-க்கு மாற்று ஏற்பாடாக HUDCO நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெற்று திட்டம் செயல்படுத்தவும் - திருத்திய நிர்வாக அனுமதி பெறவும் - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பு

பார்வை :
1. அரசாணை எண்.50 (நிலை) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( ந.நி 2) நாள். 21.05.2018.
2. தலைமை செயலர், தமிழ்நாடு அரசு, அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வு கூட்டம் நாள்.26.12.2019.

*********

கோயம்புத்தூர் மாநகராட்சியின் இணைக்கப்பட்ட பகுதிகளில் பவானி நதியை நீர் ஆதாரமாக கொண்டு குடிநீர் விநியோக வளர்ச்சி திட்டம்– பில்லூர் III - AMRUT திட்டத்தின் கீழ் மதிப்பீட்டுத் தொகை ரூ. 740.15 கோடியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல் படுத்த கீழ்கண்ட நிதி முறையின்படி வருடாந்திர பராமரிப்புத் தொகை ரூ.20.17 கோடி மாநகராட்சியில் செலவிடவும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நிதி முறை : (ரூ.கோடியில்)

| | |
|---|---|
| அம்ரூத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் பங்குத்தொகை | 214.27 |
| அம்ரூத் திட்டத்தின்கீழ் மாநில அரசின் பங்குத்தொகை | 129.86 |
| மாநகராட்சின் பங்கு தொகை | 74.02 |
| ஆசிய வளர்ச்சி வங்கி நிதி (ADB) (Tamil Nadu Urban Flagship Investment Programme – TNUFIP) | 322.00 |
| மொத்தம் | 740.15 |

கடந்த மாதம் 11.11.2019 அன்று அம்ரூத் திட்டம் தொடர்பாக புது தில்லியில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் டிசம்பர் 2019 க்கு பிறகு எடுத்துக்கொள்ளப்படும் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி உதவியை கருத்தில் கொள்வதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, முன்னரே ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்து அம்ரூத் திட்ட பணிகளை எடுத்துக்கொள்ளுமாறும், அம்ரூத் திட்டத்தில் நிதி உதவி பெறுமாறும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி திட்டத்தில் மூன்று சிப்பங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 26.12.2019 அன்று தலைமை செயலர், தமிழ்நாடு அரசு, அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற ஆய்வு கூட்டத்தில் TNUIFSL நிறுவனம் திட்டம் Tranche III -ன் கீழ் எடுத்துக்கொள்ள ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேற்படி பில்லூர் III குடிநீர் திட்டத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு அதற்கான நிதி மாநில அரசின் உத்தரவாதத்துடன் HUDCO நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெறவும், மேற்படி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம் அவர்களின் கடிதம் எண். F.60617/WSIS to CBE Corpon/AE3/PDC/2017/10.01.2020–ம் தேதிய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முகவரியிட்ட கடிதத்தில் திட்ட மதிப்பீட்டுத் தொகையில் ஒப்பந்தப்புள்ளியில் 3 சிப்பங்களுக்கும் அதிகப்படியாக வரும் திருத்திய மதிப்பீட்டுக்கு நிதி தேவை விபரங்கள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார். அதற்கான திருத்திய நிர்வாக அனுமதி பெற ஆவன செய்யுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

திருத்தப்பட்ட நிதி தேவை விபரங்கள்:

(ரூ.கோடியில்)

| சிப்பம் விபரங்கள் | அம்ருத் திட்டத்தின்படி ஒப்புதல் பெற்ற தொகை | அரசானையின்படி ஒப்புதல் பெற்ற தொகை (2017–18 SOR) | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (GST உட்பட) | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (GST,LS and Overheads உட்பட) |
|---|---|---|---|---|
| சிப்பம்-I<br>கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளில் பவானி ஆற்றை நீர் ஆதாரமாகக்கொண்டு குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் மேற்கொள்ளுதல்<br>(Head Works, Pipeline,MST and MSRs)<br>BOQ Value - Rs.434.55 Crore | 500.05 | 570.27 | 470.15 | 614.86 |
| சிப்பம்-II<br>வடிவமைப்பு மற்றும் நாள் ஒன்றுக்கு 178.30 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுதல்<br>BOQ Value - Rs.92.27 Crore | 92.51 | 105.21 | 104.90 | 92.51 |

| | | | | |
|---|---|---|---|---|
| சிப்பம்-III, வடிவமைப்பு மற்றும் 900 மீட்டர் நீளத்திற்கு கட்டன் மலைக்கு குறுக்கே குகை வழிப்பாதை (Tunnel) அமைத்தல் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பன்னிமடையில் உள்ள முதன்மை நீர்தேக்கத் தொட்டி வரை கொண்டு செல்ல பிரதான குழாய் அமைத்தல். BOQ Value - Rs.54.88 Crore | **56.85** | 64.67 | 61.36 | 72.49 |
| மொத்தம் | **649.41** | 740.15 | 636.41 | 779.86 |
| வருடாந்திர பராமரிப்பு கட்டணம் ரூ.22.98 கோடி (விலை மாற்றம் உட்பட)(Price escalation) | | | | |

நிலம் கையகப்படுத்துவதற்கான மொத்த ஒதுக்கீடுத் தொகை ரூ.105.56 கோடி, நிலம் கையகப்படுத்துவதற்கான மொத்த தொகை ரூ.104.00 கோடி மாநகராட்சியால் ரூ.60.00 கோடி மூலதன மானிய நிதி பெறப்பட்டுள்ளது. மீதத்தொகை ரூ.44.00 கோடியும் சேர்த்து HUDCO நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெற்றும் இத்திட்டம் செயல் படுத்தவேண்டியுள்ளது.

எனவே, நிதி ஆதாரத்தில் கடனுதவி உட்பட திருத்திய நிதிமுறை கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூ.கோடியில்)

| விபரம் | மதிப்பீடு |
|---|---|
| அம்ரூத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் பங்குத்தொகை | 214.27 |
| அம்ரூத் திட்டத்தின்கீழ் மாநில அரசின் பங்குத்தொகை | 129.86 |
| மாநகராட்சின் பங்கு தொகை | 74.02 |
| HUDCO கடனுதவி (அரசு உத்தரவாதத்துடன்) (ரூ.322.00கோடி+ரூ.39.71கோடி) | 361.71 |
| மொத்த மதிப்பு | 779.86 |

கோயம்புத்தூர் மாநகராட்சியின் இணைக்கப்பட்ட பகுதிகளில் பவானி நதியை நீர் ஆதாரமாக கொண்டு குடிநீர் விநியோக வளர்ச்சி திட்டம் - பில்லூர் திட்டம் III அம்ரூத் திட்ட நிதி உதவி உட்பட மேற்கண்ட திருத்திய மதிப்பீட்டுத் தொகையில் ஒப்பந்தப்புள்ளியில் 3 சிப்பங்களுக்கும் அதிகப்படியாக வரும் மதிப்பீட்டுக்கு மேற்கண்ட நிதி ஆதாரத்தில் மொத்த மதிப்பீட்டுதொகை மற்றும் நிலம் கையகப்படுத்துவதற்கான மீதத்தொகை உட்பட ரூ.779.86 கோடியில் (ரூ.779.86கோடி–ரூ.740.15கோடி = ரூ.39.71 கோடி+ரூ.322.00 கோடி+ரூ.44.00 கோடி) ரூ.405.71 கோடிக்கு மாநில அரசின் உத்தரவாதத்துடன் HUDCO நிறுவனத்திடமிருந்து மாநகராட்சி நேரடியாக கடனுதவி பெறவும் மற்றும் கடனுதவி பெறுவதற்கான அனைத்து ஒப்பந்த ஆவணங்களிலும் ஆணையாளர் கையொப்பம் இடுவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. HUDCO நிறுவனத்திடமிருந்து மாநகராட்சி நேரடியாக கடனுதவி பெறலாம்
2. கடனுதவி பெறுவதற்கான அனைத்து ஒப்பந்த ஆவணங்களிலும் ஆணையாளர் கையொப்பம் இடலாம்.

அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1987/2010/ ப.வ.(பி)

---

**பொருள் எண் 6**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் ஆகிய மூன்று பகுதிகளில் குடிநீர் விநியோக அபிவிருத்தி திட்டம் ரூ.108.16 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது – திருத்திய நிர்வாக அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளான கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் ஆகிய மூன்று பகுதிகளில் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்த கூடுதல் அபிவிருத்தி திட்டத்திற்காக ரூ.108.16 கோடி மற்றும் ரூ.2.76 கோடி வருடாந்திர பராமரிப்பு செலவுக்காக அரசு ஆணை எண்(எம்.எஸ்) 13, நதி (ம) கு.வ துறை (எம்.சி II) நாள் 27.01.2016 அன்று அனுமதி வழங்கியுள்ளது. மேற்கண்ட திட்ட ஒப்புதலுக்கான அரசு ஆணையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், குடிநீர்பணியை மேற்கொள்ள வேண்டும் என்றும், மேற்படி திட்டத்தில் ரூ.15.46 கோடி மாநகராட்சியின் பங்காகவும், மேற்பார்வை கட்டணமாகவும் செலுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் அரசு ஆணையில், நிதி ஆதாரம் கீழ்கண்டவாறு அனுமதிக்கப்பட்டுள்ளது.

நிதி ஆதாரம்:

| வ.எண் | செலவு மேற்கொள்ளப்படும் வகை | ரூ.(கோடியில்) |
|---|---|---|
| 1. | TNUDF கடன் (under KfW assisted SMIF-TN-II-2) | 61.80 |
| 2 | PSGF Grant (under KfW assisted SMIF-TN-II-2 ) | 30.90 |
| 3. | மாநகராட்சி பங்கீடு | 15.46 |
| | மொத்த திட்டத்தின் மதிப்பு | 108.16 |

தற்பொழுது, மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம் அவர்களின் கடிதம் எண். F.RAS for Kfw Works/AE1/UGSS/PM/2020 தேதி.03.01.2020–ம் தேதிய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முகவரியிட்ட கடிதத்தில் நடைபெற்றுவரும் பணிகளுக்கான திருத்திய திட்ட மதிப்பீட்டுத் தொகையில் நிதி தேவை விபரங்கள் மேற்படி கடிதத்துடன் கீழ்க்கண்டவாறு இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.அதற்கான திருத்திய நிர்வாக அனுமதி, தேவையான நிதி முறையின்படி அரசிடம் பெறவும் ஆவன செய்யுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

(ரூ.இலட்சத்தில்)

| திட்டத்தின் பெயர் | அசல் திட்ட மதிப்பீடு (நிர்வாக அனுமதி யின் படி) | திருத்திய திட்ட மதிப்பீடு | அதிகப் படியான தொகை | அதிகப் படியான சதவீதம் | அதிகப்படியான செலவினக் காரணம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| கோயம்புத்தூர் மாநகராட்சியின் இணைக்கப்பட்ட பகுதிகளான கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் குடிநீர் விநியோக அபிவிருத்தி திட்டம் | 10816.00 | 12692.50 | 1876.90 | 17% | விலை விகித பட்டியல், அதிகப்படியான ஒப்பந்தபுள்ளிகள் (Tender) செலவினம், பொருட்கள் மற்றும் சேவை வரி, (GST) துறைகளுக்கான அனுமதி பெறுவதற்கான செலவினம், கூடுதல் பணி மேற்கொள்ளுதல், கூடுதல் அளவீடுகள் அதற்கான சென்டேஜ் செலவினம் | கூடுதல் நிதிக்கான வழிவகை IUDF,CGF-ன் கீழ்(மூலதன மானிய நிதி) செயல் படுத்துதல் |

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளான கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் பகுதிகளில் செயல்பட்டு வரும் குடிநீர் விநியோக அபிவிருத்தி திட்டத்திற்கான திருத்திய திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**126.925** கோடிக்கும் மற்றும் கூடுதல் செலவினத்தொகை ரூ.**18.769** கோடிக்கு IUDM, CGF (மூலதன மானிய நிதி)**–**ன் கீழ் வழிவகை செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: **1.** திருத்திய திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**126.925** கோடிக்கு மாமன்ற அனுமதி பெறலாம்.

**2.** கூடுதல் மதிப்பீட்டுத்தொகை (செலவினத்தொகை) ரூ.**18.769** கோடிக்கு IUDM, CGF (மூலதன மானிய நிதி)**–**ன் கீழ் வழிவகை செய்யவும்அனுமதிக்கலாம்.

அனுமதிக்கலாம். ந.க.எண்.**648/2013**/ப.வ.எம்

---

## பொருள் எண் 7

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி –பொது சுகாதாரம் - வீடற்றோர் தங்கும் காப்பகம் – 1. கெம்பட்டி காலனி – 2. R.S. புரம் ஆரோக்கியசாமி சாலை வீடற்றோர் தங்கும் விடுதி (II) மற்றும் 3. NGR நகர் பகுதியில் KNG புதூர் ரோடு கவுண்டம்பாளையம் பகுதிகளில் செயல்பட்டு வரும் வீடற்றோர் தங்கும் விடுதி –ஒப்பந்ததாரர் நியமனம் 3 ஆண்டு காலம் முடிவடைந்து - புதிய ஒப்பந்தப்புள்ளி கோரவும், உத்தேச தொகை, Schedule form மற்றும் ஒப்பந்த காலம் நிர்ணயம் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதி வேண்டுதல் -தொடர்பாக.

--------

ஆணையாளர் அவர்களின் 03.03.2016–ந் தேதி உத்திரவின்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள 1. கெம்பட்டி காலனி – 2. R.S. புரம் ஆரோக்கியசாமி சாலை வீடற்றோர் தங்கும் விடுதி (II) மற்றும் 3. NGR நகர் பகுதியில் KNG புதூர் ரோடு கவுண்டம்பாளையம் ஆகிய மூன்று வீடற்றோர் தங்கும் விடுதியை நடத்த (02.01.2017 முதல் 03.01.2020 வரை 3 வருடங்கள்) முறையே தி/ள். Helping Hearts Trust மற்றும் தி/ள் ஈர நெஞ்சம் அறக்கட்டளை, நிறுவனங்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இரண்டு நிறுவனங்களுக்கான பணிக்காலம் வரும் 02.01.2020-ல் முடிவடைகிறது. மேற்படி மூன்று ஆதரவற்றோர் தங்கும் விடுதிகளை பராமரிப்பு செய்யும் பொருட்டு புதிய ஒப்பந்தபுள்ளி கோரலாம். மேலும் NULM திட்டத்தின் கீழ் SUH நிதியில் இச்செலவினத்தை மேற்கொள்ளலாம். இதற்கான உத்தேச செலவினம் கீழ்கண்டவாறு கணக்கு செய்யப்பட்டுள்ளது.

| ஒரு தங்கும் விடுதிக்கான பயனாளிகள் | ஒரு நாள் செலவினம் (ஒரு நபருக்கு) | ஒரு மாத செலவினம் (ஒரு நபருக்கு) | 40 நபர்களுக்கான செலவினம் (ஒரு மாதத்திற்கு) | 2 ஆண்டு செலவினம் |
|---|---|---|---|---|
| 40 நபர்கள் | ரூ. 32/- | ரூ. 992/- | 992×40= 39,680/- | ரூ.9,52,320/- |

எனவே ஒரு விடுதிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,60,000/- மேற்படி உத்தேச செலவினத் தொகை அடிப்படையில் மூன்று விடுதிகளுக்கு தனித்தனியான செலவினத்தில் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் அதற்கான செலவினத்தை NULM திட்டத்தில் உள்ள SUH இனத்தில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10080/2016/எம்இ6

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சியில் தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின் கீழ், குழும இயக்குநர் மாநில நகர் நல நல்வாழ்வு சங்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் (ந.க.எண்.11480/NUHM/SHS/2016 நாள்.11.01.2019) தெரிவித்துள்ள 5 சுகாதார நிலையங்களை (1.எம். எம் ஹோம் 2. பீளமேடு 3. செல்வபுரம் 4. எஸ்.எல் ஹோம் 5.சிங்காநல்லூர்) நகர சமூக சுகாதார மையமாக மேம்படுத்தி புதிய கட்டிடம் கட்டுவதற்கு, முதல் கட்டமாக, நிலையம் ஒன்றிற்கு ரூ.15,00,000/- வீதமும், இரண்டாம் கட்டமாக ரூ.37.50 இலட்சம் வீதமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி பீளமேடு பயனீர் மில்ஸ் சாலையில் உள்ள நகாப்புற சுகாதார மையத்தை, நகர சமூக சுகாதார மையமாக மேம்படுத்திட, மருத்துவ அலுவலா் கோரிய வசதிகளுடன் (Labour ward with Toilet and Operation theatre with Sterilization unit) கூடிய கட்டிடம் கட்டுவதற்கு முதல் கட்டமாக ரூ.99,00,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் ரூ.52.50 இலட்சம் NUHM நிதியிலிருந்தும் மீதம் ரூ.46.50 இலட்சம் மாநகராட்சி பொது நிதியிலிருந்தும் மேற்கொள்ளவும். இத்தொகையினை NUHM நிதியிலிருந்து பெறுவதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 38 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.38-க்குட்பட்ட பயனீர் மில்ஸ் சாலையில் அமைந்துள்ள, நகாப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை நகர சமூக சுகாதார மையமாக மேம்படுத்திட கூடுதல் கட்டிடம் கட்டுதல். | 99.00 |

மேற்காண் பீளமேடு நகர்ப்புற சுகாதார மையத்தினை மேம்படுத்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.99.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :– அனுமதிக்கலாம் ந.க.எண் : **392/2020/எம்.டி.2**

---

## பொருள் எண் 9

**பொருள்:-** கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளாகிய துடியலூர், வெள்ளகிணறு, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, விளாங்குறிச்சி, காளப்பட்டி, குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளுக்கு குடிநீர் விநியோக வளர்ச்சி திட்டம் ரூ.**409.33** கோடிக்கு திருத்தப்பட்ட அரசு ஆணை எண் G.O.(Ms).No.**38** MA &WS (MC –II) Department நாள் **12.04.18** அன்று நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. திருத்திய நிர்வாக அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

------

கோயம்புத்தூர் மாநகராட்சி அம்ரூத் (AMRUT) **2015–2016** திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோக வளர்ச்சி திட்டத்தில் துடியலூர், வெள்ளக்கிணறு, சரவணம்பட்டி, சின்னவேடம்பட்டி, விளாங்குறிச்சி, காளப்பட்டி, குனியமுத்தூர் மற்றும் குறிச்சி ஆகிய **8** மாநகராட்சி பகுதிகளில் ரூ.**409.33** கோடியில் மேற்கொள்ள நிதி ஆதாரம் கீழ்கண்டவாறு பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

**நிதி ஆதாரம்:**

| **வ.எண்** | **செலவு மேற்கொள்ளப்படும் வகை** | **ரூ.(கோடியில்)** |
|---|---|---|
| 1. | மத்திய அரசின் பங்குத்தொகை<br>(under AMRUT SAAP-I ) | 130.48 |
| 2. | தமிழ்நாடு அரசின் பங்குத்தொகை<br>(under AMRUT SAAP-I) | 79.08 |
| 3. | (PSGF under KfW assisted -TN-II-2) மானியம் | 56.49 |
| 4. | (TNUDF under KfW assisted SMIF-TN-II-2 loan) கடன் | 102.35 |
| 5. | மாநகராட்சியின் பங்கீடு | 40.93 |
| | **மொத்த திட்டத்தின் மதிப்பு** | **409.33** |

தற்பொழுது, மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம் அவர்களின் கடிதம் எண். **F.RAS for Kfw Works/AE1/UGSS/PM/2020 தேதி. 03.01.2020**–ம் தேதிய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முகவரியிட்ட கடிதத்தில் நடைபெற்றுவரும் பணிகளுக்கான திருத்திய திட்ட மதிப்பீட்டுத் தொகையில் நிதி தேவை விபரங்கள் மேற்படி கடிதத்துடன் கீழ்க்கண்டவாறு இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.அதற்கான திருத்திய நிர்வாக அனுமதி, தேவையான நிதி முறையின்படி அரசிடம் பெறவும் ஆவன செய்யுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

**(ரூ.இலட்சத்தில்)**

| **திட்டத்தின் பெயர்** | **அசல் திட்ட மதிப்பீடு (நிர்வாக அனுமதியின் படி)** | **திருத்திய திட்ட மதிப்பீடு** | **அதிகப் படியான தொகை** | **அதிகப் படியான சதவீதம்** | **அதிகப்படியான செலவினக் காரணம்** | **குறிப்பு** |
|---|---|---|---|---|---|---|
| கோயம்புத்தூர் மாநகராட்சியின் இணைக்கப்பட்ட பகுதிகளான துடியலூர், வெள்ளகிணறு, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, விளாங்குறிச்சி, காளப்பட்டி, குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளுக்கு குடிநீர் விநியோக அபிவிருத்தி திட்டம் | 40933.00 | 48771.00 | 7838.00 | 19% | விலை விகித பட்டியல், அதிகப்படியான ஒப்பந்தபுள்ளிகள்(Tender) செலவினம், பொருட்கள் மற்றும் சேவை வரி, (GST) மற்ற துறைகளுக்கான அனுமதி பெறுவதற்கான செலவினம், கூடுதல் பணி மேற்கொள்ளுதல், கூடுதல் அளவீடுகள் அதற்கான சென்டேஜ் செலவினம் | கூடுதல் நிதிக்கான வழிவகை CGF-ன் கீழ் (மூலதன மானிய நிதி) கீழ் செயல் படுத்துதல் |

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளான துடியலூர், வெள்ளகிணறு, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, விளாங்குறிச்சி, காளப்பட்டி, குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளில் செயல்பட்டு வரும் குடிநீர் விநியோக வளர்ச்சி திட்டத்திற்கான திருத்திய திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. **487.71** கோடிக்கும் மற்றும் கூடுதல் செலவினத் தொகை ரூ. **78.38** கோடிக்கு CGF (மூலதன மானிய நிதி)–ன் கீழ் வழிவகை செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. திருத்திய திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**487.71** கோடிக்கு மாமன்ற அனுமதி பெறலாம்.

2. கூடுதல் மதிப்பீட்டுத்தொகை (செலவினத்தொகை) ரூ.**78.38** கோடிக்கு CGF (மூலதன மானிய நிதி)–ன் கீழ் வழிவகை செய்யவும் அனுமதிக்கலாம்.
அனுமதிக்கலாம்.

ந.க.எண்.**410/2015/ப.வ.எம்**

---

## பொருள் எண் 10

**பொருள்:** கோவை மாநகராட்சி – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் – பில்லூர் 2 ம் குடிநீர் திட்டம் – வெள்ளியங்காடு 125 MLD குடிநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் மழைநீர் வடிகால் வசதி, சாலை வசதி மற்றும் தெருவிளக்கு வசதிகள் போன்ற பணிகள் மேற்படி பணி தி/ள். கே. ஏ. எஸ். கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புத்தூருக்கு வழங்கப்பட்டது – அந்நிறுவனத்தில் முக்கிய நிர்வாக பங்குதாரரிடம் இருந்து பெறப்பட்ட கடிதத்தில் ஒப்பந்ததாரருக்கு திடீரென எதிர்பாராமல் ஏற்பட்ட உடல்நலக்குறைவால் மேற்கொண்டு பணிகள் தொடர முடியாத நிலையில் ஒப்பந்தங்களை முடிவுக்குக் கொண்டு வந்து மேற்படி நிறுவனத்திற்கு வைப்புத் தொகை மற்றும் பிடித்தம் செய்யப்பட்ட தொகை திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

கோவை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பில்லூர் 2 ம் தனிக்குடிநீர் திட்டத்தில் சிப்பம் 3–ன்கீழ் எடுக்கப்பட்ட பணியான வெள்ளியங்காடு பகுதியில் நிறுவப்பட்டுள்ள 125 MLD குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ரூ. 14.00 லட்சம் மதிப்பீட்டில் நிலைய வளாகத்தில் மழைநீர் வடிகால் வசதி, சாலை வசதி மற்றும் தெருவிளக்கு வசதிகள் போன்ற பணிகள் தி/ள். கே. ஏ. எஸ். கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புத்தூர் ஒப்பந்ததாரருக்கு 16.05.2011–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

குடிநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டிட பணிகள் மற்றும் சுற்றுச்சுவர், காவலர் குடியிருப்பு பணிகள் றிறைவவடயாமல் இருந்ததால் மேற்படி பணிகள் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் 14.12.2015 ல் ஒப்பந்ததாரரின் நிர்வாக பங்குதாரரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் ஒப்பந்ததாரரது உடல்நிலை நீண்ட காலமாக சரியில்லாத காரணத்தாலும் மற்றும் வயது முதிர்வின் காரணமாக தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாலும், மற்ற இரு பங்குதாரர்கள் பெண்களாக இருப்பதனாலும் பணியை தொடர்ந்து செய்து முடிக்க இயலாத நிலை உள்ளதால் மனிதாபிமான அடிப்படையில் மேற்கூறிய ஒப்பந்த பணியினை முடிவுக்கு கொண்டு வந்து (closure of the contract) மேற்படி பணிக்காக தன்னால் செலுத்தப்பட்ட வைப்பு தொகையை திருப்பி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி தி/ள். கே. ஏ. எஸ். கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புத்தூர் ஒப்பந்ததாரரின் கோரிக்கையினை மனிதாபிமானமாகவும் சாதகமாகவும் பரிசீலித்து மேற்படி பணியினை முடிவுக்கு கொண்டு வரவும் (closure of the contractor), அப்பணிக்காக செலுத்திய வைப்புத் தொகை ரூ. 27,100/–ஐ திருப்பி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம் ந க எண். AEE/JN/ CBE/ ER-1/10–11/JN5

---

**பொருள் எண் 11**

**பொருள்:** கோவை மாநகராட்சி – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் – பில்லூர் 2 ம் குடிநீர் திட்டம் – வெள்ளியங்காடு 125 MLD குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுற்றுச்சுவர் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டும் பணிகள் மேற்படி பணி தி/ள். கே. ஏ. எஸ். கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புத்தூருக்கு வழங்கப்பட்டது – அந்நிறுவனத்தில் முக்கிய நிர்வாக பங்குதாரரிடம் இருந்து பெறப்பட்ட கடிதத்தில் ஒப்பந்ததாரருக்கு திடீரென எதிர்பாராமல் ஏற்பட்ட உடல்நலக்குறைவால் மேற்கொண்டு பணிகள் தொடர முடியாத நிலையில் ஒப்பந்தங்களை முடிவுக்குக் கொண்டு வந்து மேற்படி நிறுவனத்திற்கு வைப்புத் தொகை மற்றும் பிடித்தம் செய்யப்பட்ட தொகை திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

கோவை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பில்லூர் 2 ம் தனிக்குடிநீர் திட்டத்தில் சிப்பம் 3–ன்கீழ் எடுக்கப்பட்ட பணியான வெள்ளியங்காடு பகுதியில் நிறுவப்பட்டுள்ள 125 MLD குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ரூ. 74.00 லட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் மற்றும் காவலர் குடியிருப்பு பணிகள் தி/ள். கே. ஏ. எஸ். கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புத்தூர் ஒப்பந்ததாரருக்கு 16.05.2011–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி பணிகள் துவங்கப்பட்டு காவலர் குடியிருப்பு இரண்டாம் தளம் வரையும் சுற்றுச்சுவர் 1020 மீ நீளத்தில் 650 மீ நீளத்திற்கு கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் 14.12.2015 ல் ஒப்பந்ததாரரின் நிர்வாக பங்குதாரரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் ஒப்பந்ததாரரது உடல்நிலை நீண்ட காலமாக சரியில்லாத காரணத்தாலும் மற்றும் வயது முதிர்வின் காரணமாக தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாலும், மற்ற இரு பங்குதாரர்கள் பெண்களாக இருப்பதனாலும் பணியை தொடர்ந்து செய்து முடிக்க இயலாத நிலை உள்ளதால் மனிதாபிமான அடிப்படையில் மேற்கூறிய ஒப்பந்த பணியினை முடிவுக்கு கொண்டு வந்து (closure of the contract) மேற்படி பணிக்காக தன்னால் செலுத்தப்பட்ட வைப்பு தொகை மற்றும் பிடித்தம் செய்யப்பட்ட தொகையும் திருப்பி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி தி/ள். கே. ஏ. எஸ். கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புத்தூர் ஒப்பந்ததாரரின் கோரிக்கையினை மனிதாபிமானமாகவும் சாதகமாகவும் பரிசீலித்து மேற்படி பணியினை முடிவுக்கு கொண்டு வரவும் (closure of the contractor), அப்பணிக்காக செலுத்திய

வைப்புத் தொகை ரூ. 1,56,100/— மற்றும் பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ. 2,64,025/—ஐ திருப்பி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம் ந க எண். CE/CBE/ ER-1/10–11/JN5

---

**பொருள் எண் 12**

**பொருள்:** கோவை மாநகராட்சி – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் – பில்லூர் 2 ம் குடிநீர் திட்டம் – இராமகிருஷ்ணாபுரத்தில் 30 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைந்துள்ள இடத்தினைச் சுற்றி சுற்றுச்சுவர், காவலர் குடியிருப்பு மற்றும் அலுவலக கட்டிடம் கட்டும் பணிகள் மேற்படி பணி தி/ள். கே. ஏ. எஸ். கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புத்தூருக்கு வழங்கப்பட்டது – அந்நிறுவனத்தில் முக்கிய நிர்வாக பங்குதாரரிடம் இருந்து பெறப்பட்ட கடிதத்தில் ஒப்பந்ததாரருக்கு திடீரென எதிர்பாராமல் ஏற்பட்ட உடல்நலக்குறைவால் மேற்கொண்டு பணிகள் தொடர முடியாத நிலையில் ஒப்பந்தங்களை முடிவுக்குக் கொண்டு வந்து மேற்படி நிறுவனத்திற்கு வைப்புத் தொகை மற்றும் பிடித்தம் செய்யப்பட்ட தொகை திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

கோவை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பில்லூர் 2 ம் தனிக்குடிநீர் திட்டத்தில் சிப்பம் 6–ன்கீழ் எடுக்கப்பட்ட பணியான இராமகிருஷ்ணாபுரத்தில் 30 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைந்துள்ள இடத்தினைச் சுற்றி ரூ. 45.00 லட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர், காவலர் குடியிருப்பு மற்றும் அலுவலக கட்டிடம் கட்டும் பணிகள் தி/ள். கே. ஏ. எஸ். கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புத்தூர் ஒப்பந்ததாரருக்கு 16.05.2011–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி பணிகள் துவங்கப்பட்டு காவலர் குடியிருப்பு மற்றும் சுற்றுச்சுவர் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டு, பிரதான வாயில் கதவு மற்றும் ஜன்னல்கள் பொருத்தப்படாமல் இருந்தது. இந்நிலையில் 14.12.2015 ல் ஒப்பந்ததாரரின் நிர்வாக பங்குதாரரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் ஒப்பந்ததாரரது உடல்நிலை நீண்ட காலமாக சரியில்லாத காரணத்தாலும் மற்றும் வயது முதிர்வின் காரணமாக தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாலும், மற்ற இரு பங்குதாரர்கள் பெண்களாக இருப்பதனாலும் பணியை தொடர்ந்து செய்து முடிக்க இயலாத நிலை உள்ளதால் மனிதாபிமான அடிப்படையில் மேற்கூறிய ஒப்பந்த பணியினை முடிவுக்கு கொண்டு வந்து (closure of the contract) மேற்படி பணிக்காக தன்னால் செலுத்தப்பட்ட வைப்பு தொகை மற்றும் பிடித்தம் செய்யப்பட்ட தொகையும் திருப்பி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி தி/ள். கே. ஏ. எஸ். கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புத்தூர் ஒப்பந்ததாரரின் கோரிக்கையினை மனிதாபிமானமாகவும் சாதகமாகவும் பரிசீலித்து மேற்படி பணியினை முடிவுக்கு கொண்டு வரவும் (closure of the contractor), அப்பணிக்காக செலுத்திய வைப்புத் தொகை ரூ. 92,300/– மற்றும் பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ. 1,44,221/–ஐ திருப்பி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம் ந க எண். CE/CBE/ ER-3/10–11/JN5

---

**பொருள் எண் 13**

**பொருள்:** கோவை மாநகராட்சி – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் – பில்லூர் 2 ம் குடிநீர் திட்டம் – வெள்ளியங்காடு 125 MLD குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அலுவலர் குடியிருப்பு கட்டும் பணிகள் மேற்படி பணி தி/ள். கே. ஏ. எஸ். கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புத்தூருக்கு வழங்கப்பட்டது – அந்நிறுவனத்தில் முக்கிய நிர்வாக பங்குதாரரிடம் இருந்து பெறப்பட்ட கடிதத்தில் ஒப்பந்ததாரருக்கு திடீரென எதிர்பாராமல் ஏற்பட்ட உடல்நலக்குறைவால் மேற்கொண்டு பணிகள் தொடர முடியாத நிலையில் ஒப்பந்தங்களை முடிவுக்குக் கொண்டு வந்து மேற்படி நிறுவனத்திற்கு வைப்புத் தொகை மற்றும் பிடித்தம் செய்யப்பட்ட தொகை திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

கோவை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பில்லூர் 2 ம் தனிக்குடிநீர் திட்டத்தில் சிப்பம் 3–ன் கீழ் எடுக்கப்பட்ட பணியான வெள்ளியங்காடு பகுதியில் நிறுவப்பட்டுள்ள 125 MLD குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ரூ. 75.00 லட்சம் மதிப்பீட்டில் அலுவலர் குடியிருப்பு பணிகள் தி/ள். கே. ஏ. எஸ். கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புத்தூர் ஒப்பந்ததாரருக்கு 16.05.2011–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி பணிகள் துவங்கப்பட்டு அலுவலர் குடியிருப்பு கட்டிட அடித்தளம் வரையும் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் 14.12.2015 ல் ஒப்பந்ததாரரின் நிர்வாக பங்குதாரரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் ஒப்பந்ததாரரது உடல்நிலை நீண்ட காலமாக சரியில்லாத காரணத்தாலும் மற்றும் வயது முதிர்வின் காரணமாக தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாலும், மற்ற இரு பங்குதாரர்கள் பெண்களாக இருப்பதனாலும் பணியை தொடர்ந்து செய்து முடிக்க இயலாத நிலை உள்ளதால் மனிதாபிமான அடிப்படையில் மேற்கூறிய ஒப்பந்த பணியினை முடிவுக்கு கொண்டு வந்து (closure of the contract) மேற்படி பணிக்காக தன்னால் செலுத்தப்பட்ட வைப்பு தொகை மற்றும் பிடித்தம் செய்யப்பட்ட தொகையும் திருப்பி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி தி/ள். கே. ஏ. எஸ். கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புத்தூர் ஒப்பந்ததாரரின் கோரிக்கையினை மனிதாபிமானமாகவும் சாதகமாகவும் பரிசீலித்து மேற்படி பணியினை முடிவுக்கு கொண்டு வரவும் (closure of the contractor), அப்பணிக்காக செலுத்திய வைப்புத் தொகை ரூ. 1,59,500/– மற்றும் பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ. 40,302/–ஐ திருப்பி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம் ந க எண். CE/CBE/ ER-2/10–11/JN5

---

## பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 18-க்குட்பட்ட டாடா நகர் பிரதான சாலை முதல் மகாராணி அவென்யூ 5 வது பேஸ் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். ந.க.எண்.10167/2019/எம்.டி.2 | 98.00 | ம.தீஎண் 295 நாள். 8.11.19 | 17.12.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.எஸ்.எஸ். இன்ஜினீயர்ஸ் 12.87% அதிகம்<br>2).தி/ள். தெய்வாணை கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.40% அதிகம் | தி/ள். தெய்வாணை கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.40% அதிகம் |
| 2 | வார்டு எண்.15க்குட்பட்ட புதுகிணறு வீதி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் ந.க.எண்.10160/2019/எம்.டி.2 | 72.00 | ம.தீஎண் 298 நாள். 08.11.19 | 17.12.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.எஸ்.எஸ். இன்ஜினீயர்ஸ் 0.01% குறைவு<br>2).திரு.ஆர்.வி.பி. பாலமுருகன் 0.72% அதிகம் | தி/ள்.எஸ்.எஸ். இன்ஜினீயர்ஸ் 0.01% குறைவு |
| 3 | வார்டு எண்.16க்குட்பட்ட திருமுருகன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் ந.க.எண்.10169/2019/எம்.டி.2 | 75.00 | ம.தீஎண் 296 நாள். 08.11.19 | 17.12.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.எஸ்.எஸ். இன்ஜினீயர்ஸ் 0.06% குறைவு<br>2).திரு.ஆர்.வி.பி. பாலமுருகன் 0.72% அதிகம் | தி/ள்.எஸ்.எஸ். இன்ஜினீயர்ஸ் 0.06% குறைவு |
| 4 | வார்டு எண்.18க்குட்பட்ட அலமேலுமங்கை அவென்யூ பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் ந.க.எண்.10165/2019/எம்.டி.2 | 57.00 | ம.தீஎண் 287 நாள். 08.11.19 | 17.12.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.ஆர்.வி.ஜி மெட்டல் இண்டஸ்ரியர்ஸ் 2.02% அதிகம்<br>2).தி/ள். தெய்வாணை கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0.10% குறைவு | தி/ள். தெய்வாணை கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0.10% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | வார்டு எண்.15க்குட்பட்ட பழனியப்பா நகர் முதல் கருப்பராயன் கோவில் பள்ளம் வரை உள்ள பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல்<br>ந.க.எண்.10161/2019/எம்.டி.2 | 82.50 | ம.தீஎண் 297 நாள். 08.11.19 | 17.12.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.ஜே.எஸ். அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி லிட் 4.84% அதிகம்<br>2).தி/ள்.எம்.எஸ். இன்ஜினீயர்ஸ் 10.05% அதிகம் | தி/ள்.ஜே.எஸ். அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி லிட் 4.84% அதிகம் |
| 6 | வார்டு எண்.19க்குட்பட்ட இராகவேந்திரா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல்<br>ந.க.எண்.10168/2019/எம்.டி.2 | 57.00 | ம.தீஎண் 294 நாள். 08.11.19 | 17.12.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.எஸ்.எஸ். இன்ஜினீயர்ஸ் 0.03% குறைவு<br>2).திரு.ஆர்.வி.பி. பாலமுருகன் 1.32% அதிகம் | தி/ள்.எஸ்.எஸ். இன்ஜினீயர்ஸ் 0.03% குறைவு |
| 7 | வார்டு எண்.15க்குட்பட்ட நேதாஜி பிரதான சாலை அண்ணா வீதி முதல் தெற்கு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல்<br>ந.க.எண்.10172/2019/எம்.டி.2 | 84.00 | ம.தீஎண் 299 நாள். 08.11.19 | 17.12.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.என்கான் இன்ஜினீயர்ஸ் 0.12% குறைவு<br>2).திரு.ஆர்.வி.பி. பாலமுருகன் 0.03% குறைவு | தி/ள்.என்கான் இன்ஜினீயர்ஸ் 0.12% குறைவு |
| 8 | வார்டு எண் 15,16,17,18 மற்றும் 19-க்குட்பட்ட பகுதியில் உள்ள பி.என் புதூர், வடவள்ளி, கல்வீரம்பாளையம், பொம்மணம்பாளையம், சுண்டப்பாளையம் மற்றும் வீரகேரளம் மாநகராட்சி ஆரம்ப, நடுநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு கருவி வழங்குதல் மற்றும் பராமரித்தல்.<br>ந.க.எண்.10171/2019/எம்.டி.2 | 12.50 | ம.தீஎண் 293 நாள். 08.11.19 | 17.12.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.மித்ரா அசோசியேட்ஸ் 0.21% குறைவு<br>2).தி/ள். க்ளன்ஸ் இன் கார்பரேசன் 0.51% குறைவு | தி/ள். க்ளன்ஸ் இன் கார்பரேசன் 0.51% குறைவு |
| 9 | வார்டு எண் 24-க்குட்பட்ட தடாகம் பிரதான சாலை மேற்கு சம்பந்தம் சாலை முதல் காந்தி பார்க் ரவுண்டானா வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் திரும்ப கட்டுதல்.<br>ந.க.எண்.10635/2019/எம்.டி.2 | 65.00 | முன் அனுமதி நாள். 05.11.19 | 17.12.19 முதலாம் அழைப்பு | 1).திரு.எம். ராஜேந்திரன் 0.04% குறைவு<br>2).தி/ள்.சக்திவேல் அன் கோ 0.02% குறைவு | திரு.எம். ராஜேந்திரன் 0.04% குறைவு |
| 10 | வார்டு எண்.16க்குட்பட்ட வடவள்ளி தெற்கு பகுதியில் சேதமடைந்த மாநகராட்சி நடுநிலைப் பள்ளி கட்டிடத்தினை இடித்து புதிதாக பள்ளி கட்டிடம் கட்டுதல்<br>ந.க.எண்.10170/2019/எம்.டி.2 | 75.00 | ம.தீஎண் 301 நாள். 08.11.19 | 17.12.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.எஸ்.எஸ். இன்ஜினீயர்ஸ் 0.04% குறைவு<br>2).திரு.ஆர்.வி.பி. பாலமுருகன் 0.57% அதிகம் | தி/ள்.எஸ்.எஸ். இன்ஜினீயர்ஸ் 0.04% குறைவு |
| 11 | வார்டு எண் 19-க்குட்பட்ட வீரகேரளம் எரிவாயு மயானத்திற்கு அபிவிருத்தி பணிகள் செய்தல்.<br>ந.க.எண்.9042/2019/எம்.டி.2 | 13.00 | ம.தீஎண் 224 நாள். 27.09.19 | 17.12.19 இரண்டாம் அழைப்பு | 1).திருமதி. கே.பங்கஜம் 15.15%அதிகம்<br>2).தி/ள்.என்.பி.கே அசோசியேட்ஸ் 0.49% குறைவு | தி/ள்.என்.பி.கே அசோசியேட்ஸ் 0.49% குறைவு |
| 12 | வார்டு எண் 23-க்குட்பட்ட மேற்கு மண்டல வளாகத்தில் கூடுதல் அறைகள், தரை மற்றும் முதல் தளங்களில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென பிரத்யேக கழிவறைகள் கட்டுதல்.<br>ந.க.எண்.10265/2019/எம்.டி.2 | 77.30 | ம.தீஎண் 304 நாள். 8.11.19 | 17.12.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.என்.எம்.எஸ் இன்ஜினீயர்ஸ் 8.50%அதிகம்<br>2).தி/ள்.என்.பி.கே அசோசியேட்ஸ் 4.72% அதிகம் | தி/ள்.என்.பி.கே அசோசியேட்ஸ் 4.72% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13 | வார்டு எண் 19-க்குட்பட்ட வீரகேரளம் பிரதான சாலை பகுதியில் சிறுவாணி பிரதான சாலை முதல் அனாஸ் கார்டன் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். ந.க.எண்.10158/2019/எம்.டி.2 | 99.50 | ம.தீஎண் 291 நாள். 8.11.19 | 17.12.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.ஆர்.வி.ஜி மெட்டல் இண்டஸ்ரியர்ஸ் 4.43% அதிகம்<br><br>2). திரு.ஆர்.வி.பி. பாலமுருகன் 10.75% அதிகம் | தி/ள்.ஆர்.வி.ஜி மெட்டல் இண்டஸ்ரியர்ஸ் 4.43% அதிகம் |
| 14 | வார்டு எண் 19-க்குட்பட்ட வீரகேரளம் பிரதான சாலை அனாஸ் கார்டன் முதல் அக்ரி கேட் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். ந.க.எண்.10159/2019/எம்.டி.2 | 99.00 | ம.தீஎண் 292 நாள். 8.11.19 | 17.12.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.ஆர்.வி.ஜி மெட்டல் இண்டஸ்ரியர்ஸ் 4.41% அதிகம்<br><br>2). திரு.ஆர்.வி.பி. பாலமுருகன் 15.70% அதிகம் | தி/ள்.ஆர்.வி.ஜி மெட்டல் இண்டஸ்ரியர்ஸ் 4.41% அதிகம் |
| 15 | வார்டு எண் 19-க்குட்பட்ட அஜ்ஜனூர் பிரதான சாலை முதல் சிறுவாணி சாலை சந்திப்பு பகுதியில் தடுப்பு சுவர் மற்றும் சிறுபாலம் கட்டுதல். ந.க.எண்.10166/2019/எம்.டி.2 | 98.60 | ம.தீஎண் 290 நாள். 8.11.19 | 17.12.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.ஆர்.வி.ஜி மெட்டல் இண்டஸ்ரியர்ஸ் 5.61% அதிகம்<br><br>2).தி/ள். தெய்வாணை கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.35% அதிகம் | தி/ள். தெய்வாணை கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.35% அதிகம் |
| 16 | வார்டு எண் 18-க்குட்பட்ட டாடா நகர் குறுக்கு சாலைப் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். ந.க.எண்.10164/2019/எம்.டி.2 | 70.50 | ம.தீஎண் 289 நாள். 8.11.19 | 17.12.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.எஸ்.எஸ். இன்ஜினீயர்ஸ் 7.88% அதிகம்<br>2).தி/ள். தெய்வாணை கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.47% அதிகம் | தி/ள். தெய்வாணை கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.47% அதிகம் |
| 17 | வார்டு எண் 1-க்குட்பட்ட துடியலூர் எரிவாயு மயானத்திற்கு அபிவிருத்தி பணிகள் செய்தல் ந.க.எண்.9041/2019/எம்.டி.2 | 11.50 | ம.தீஎண் 224 நாள். 27.09.19 | 17.12.19 இரண்டாம் அழைப்பு | 1).திருமதி. கே.பங்கஜம் 5.24%அதிகம்<br><br>2).தி/ள்.என்.பி.கே அசோசியேட்ஸ் 0.93% குறைவு | தி/ள்.என்.பி.கே அசோசியேட்ஸ் 0.93% குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்த புள்ளிகளை ஏற்கவும் மற்றும் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிர்வாக அனுமதிக்கு முன்அனுமதி பெறப்பட்டதற்கு பின்னேற்பு வேண்டியும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மேற்படி பணிகளை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளில் மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கலாம்.

ந.க.எண்.10167/2019/எம்.டி.2

---

## பொருள் எண் 15

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.22க்குட்பட்ட காமராஜபுரம் குறுக்கு சாலை 5 மற்றும் நியூ ஸ்கீம் சாலையில் மறுதார்தளம் அமைத்தல் ந.க.எண்.10068/2019/எம்.டி.2 | 49.00 | ம.தீஎண் 270 நாள். 30.10.19 | 29.11.19 முதலாம் அழைப்பு | 1).திரு.கே.மாரப்பன் 0.03% குறைவு<br>2).தி/ள்.ஸ்ரீ கோமதி அம்மன் அன் கோ 1.59% அதிகம் | திரு.கே.மாரப்பன் 0.03% குறைவு |
| 2 | வார்டு எண்.22க்குட்பட்ட இராமசாமி சாலை மற்றும் இரங்கசாமி சாலையில் மறுதார்தளம் அமைத்தல் ந.க.எண்.10069/2019/எம்.டி.2 | 35.00 | ம.தீஎண் 271 நாள். 30.10.19 | 29.11.19 முதலாம் அழைப்பு | 1).திரு.கே.மாரப்பன் 1.51% அதிகம்<br>2).தி/ள்.ஸ்ரீ கோமதி அம்மன் அன் கோ 0.01% குறைவு | தி/ள்.ஸ்ரீ கோமதி அம்மன் அன் கோ 0.01% குறைவு |
| 3 | வார்டு எண்.22க்குட்பட்ட பாரதிபார்க் குறுக்கு சாலை 6, பாரதிபார்க் குறுக்கு சாலை 3 மற்றும் பாரதிபார்க் சாலை 2 -ல் மறுதார்தளம் அமைத்தல் ந.க.எண்.10070/2019/எம்.டி.2 | 37.50 | ம.தீஎண் 269 நாள். 30.10.19 | 29.11.19 முதலாம் அழைப்பு | 1).திரு.கே.மாரப்பன் 0.71% அதிகம்<br>2).தி/ள்.ஸ்ரீ கோமதி அம்மன் அன் கோ 0.04% குறைவு | தி/ள்.ஸ்ரீ கோமதி அம்மன் அன் கோ 0.04% குறைவு |
| 4 | வார்டு எண்.23க்குட்பட்ட ஆர்.எஸ்.புரம் கண்ணுசாமி சாலை அம்மணி அம்மாள் பெண்கள் பள்ளியில் கூடுதல் மேம்பாட்டு பணிகள் செய்தல் ந.க.எண்.10093/2019/எம்.டி.2 | 19.50 | ம.தீஎண் 276 நாள். 30.10.19 | 29.11.19 முதலாம் அழைப்பு | 1).திரு.பி.எம். மாரிமுத்து 0.10% குறைவு<br>2).திரு.என். குருவாயூரப்பன் 6.04% அதிகம் | திரு.பி.எம். மாரிமுத்து 0.10% குறைவு |
| 5 | வார்டு எண்.22க்குட்பட்ட திருவேங்கடம் சாலை மற்றும் பொன்னுசாமி சாலையில் மறுதார்தளம் அமைத்தல் ந.க.எண்.10067/2019/எம்.டி.2 | 35.00 | ம.தீஎண் 272 நாள். 30.10.19 | 29.11.19 முதலாம் அழைப்பு | 1).திரு.கே.மாரப்பன் 1.43% அதிகம்<br>2).தி/ள்.ஸ்ரீ கோமதி அம்மன் அன் கோ 0.03% குறைவு | தி/ள்.ஸ்ரீ கோமதி அம்மன் அன் கோ 0.03% குறைவு |
| 6 | வார்டு எண்.20க்குட்பட்ட மருதமலை பிரதான சாலை மற்றும் பாரதியார் வீதி சாலை சந்திப்பிலுள்ள வாய்கால் பாலம் திரும்ப கட்டுதல் ந.க.எண்.10094/2019/எம்.டி.2 | 44.00 | ம.தீஎண் 277 நாள். 30.10.19 | 29.11.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள். ஆர்.வி.ஜி.மெட்டல் இண்டஸ்ரியர்ஸ் 0.16% குறைவு<br>2).திரு.ஆர்.வி.பி. பாலமுருகன் 1.69% அதிகம் | தி/ள். ஆர்.வி.ஜி.மெட்டல் இண்டஸ்ரியர்ஸ் 0.16% குறைவு |
| 7 | வார்டு எண்.22க்குட்பட்ட புருக்பாண்டு சாலை, குறுக்கு சாலை, மற்றும் மேட்டுப்பாளையம் சாலையில் பாதாள சாக்கடை பிரதான குழாய் அமைத்தல் ந.க.எண்.10066/2019/எம்.டி.2 | 78.00 | ம.தீஎண் 273 நாள். 30.10.19 | 29.11.19 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.ஜே.எஸ். அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி லிட் 5.03 % அதிகம்<br>2).தி/ள்.எம்.எஸ். இன்ஜினீயர்ஸ் 11.73% அதிகம் | தி/ள்.ஜே.எஸ். அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி லிட் 4.99 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 8 | கோயம்புத்தூர் மாநகராட்சியின் ஐந்து அனைத்து மண்டலங் களுக்குட்பட்ட பகுதிகளில் தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் ந.க.எண்.8661/2019/எம்.டி.2 | 75.00 | ம.தீஎண் 210 நாள். 27.09.19 | 14.11.19 முதலாம் அழைப்பு | 1).திரு.ஜி. செந்தில் குமார் 0.91% அதிகம்<br>2).திரு.கே.எஸ். பாரதி 0.09% அதிகம் | திரு.கே.எஸ். பாரதி 0.004% குறைவு (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மேற்படி பணிகளை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளில் மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கலாம்.

ந.க.எண்.10068/2019/எம்.டி.2

---

## பொருள் எண் 16

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மூலம் 01.04.2019 முதல் 31.03.2020 முடிய ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல் – தொடர்பாக

**பார்வை:** ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.05.11.2019.

---

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 193ன்படி மெசர்ஸ் தமிழ்நாடு எக்ஸ் சர்வீஸ்மென்ஸ் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்தினருக்கு 01.04.2018 முதல் 31.03.2019 முடிய ஓராண்டு காலத்திற்கு 5 ஓட்டுநர்களுக்கு தினக்கூலி அடிப்படையில் ஓட்டுநர் ஒருவருக்கு 8 மணி நேர பணிக்கு மாத ஊதியம் ரூ.25,024.49/– (சேவைக் கட்டணம் 12% மற்றும் அதற்குரிய சேவை வரிக் கட்டணம் 15% உட்பட) வழங்க அனுமதி வழங்கப்பட்டது. இந்த ஒப்பந்த காலம் 31.03.2019 உடன் முடிவடைகிறது.

டெக்ஸ்கோ நிறுவனத்தின் கடிதத்தில், டெக்ஸ்கோ ஓட்டுநர்களுக்கு ஆன ஒப்பந்த காலம் 31.03.2018ல் முடிவடைவதால், மேற்படி ஒப்பந்தத்தை 01.04.2019 முதல் 31.03.2020 முடிய ஓராண்டு காலத்திற்கு நீட்டித்து தருமாறும், அதில் ஓட்டுநர் ஒருவருக்கு 8 மணி நேர பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் ரூ.25,641.68/– (சேவைக்கட்டணம் 12% மற்றும் அதற்குரிய சேவைவரி 18% உட்பட) மேற்குறிப்பிட்ட காலத்திற்கு வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்ட மாதாந்திர ஊதியத்தில் 5 டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளுக்குட்பட்டு 01.04.2019முதல் 31.03.2020 முடிய உள்ள ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தமுறையில் பணிபுரிய ஒப்பந்த நீடிப்பு செய்யவும், இதற்காகும் செலவினம் ரூ.15,38,500.92/–க்கு ஒப்புதல் வேண்டியும், மாமன்றத்திற்குப் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண்.7498/2019/எம்.சி.7)

---

## பொருள் எண் 17

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண்.91க்கு உட்பட்ட பகுதியில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் தொகுதி ஆய்வு மற்றும் பொதுமக்கள் குறை தீர்ப்பு சந்திப்பின் போது கீழ்க்கண்ட அபிவிருத்தி பணி மேற்க்கொள்ள அறிவுறுத்தப்பட்டதின்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்:

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 91 | வார்டு எண் 91-க்குட்பட்ட சுகுணாபுரம் மேற்கில் உள்ள மயானத்திற்கு கழிப்பிடம் கட்டுதல், நடைபாதை அமைத்தல் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல் ந.க.எண்.: 980/20/எம்டி4 | 72.50 |

மேற்படி பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 980 /2020/எம்டி4

---

## பொருள் எண் 18

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண்.91க்கு உட்பட்ட பகுதியில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் தொகுதி ஆய்வு மற்றும் பொதுமக்கள் குறை தீர்ப்பு சந்திப்பின் போது கீழ்க்கண்ட அபிவிருத்தி பணி மேற்க்கொள்ள அறிவுறுத்தப்பட்டதின்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்:

| **வ.எண்** | **வார்டு எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1 | 91 | வார்டு எண் 91-க்குட்பட்ட நேதாஜி நகர் பகுதியில் உள்ள சமுதாயக்கூடத்திற்கு தடுப்புச்சுவர் கட்டுதல் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல்<br>ந.க.எண்.: 983/20/எம்டி4 | 45.00 |

மேற்படி பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 983/2020/எம்டி4

---

## பொருள் எண் 19

பொருள்: நிலம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – சிறைத்துறைக்கு சொந்தமான **45.25** ஏக்கர் இடத்தில் செம்மொழி பூங்கா அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் பெயருக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய அரசாணை பெறப்பட்டது – அரசாணையில் நிலமாற்று உபயோகம் கோரி பிரேரணை சமர்பிக்கப்பட்டது – தொடர்பாக.

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட உள்சிறை துறைக்கு சொந்தமான **45.25** ஏக்கர் நிலத்தினை செம்மொழி பூங்கா அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையரின் பெயருக்கு நிலமாற்றம் செய்ய அரசாணை (நிலை) எண்.**350**, உள் (சிறை.**4)** துறை நாள்.**06.04.2010**ன்படி அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி இடத்தில் செம்மொழி பூங்கா பணிகள் எதுவும் நடைபெறாததால் நில பயன்பாட்டு திருத்தம் கோரியதில், மாநகராட்சிக்கு மேற்படி நிலத்தின் ஒரு பகுதியில் **5.63** ஏக்கர் நிலப்பரப்பளவில் உள் விளையாட்டு அரங்கம் மற்றும் நீச்சல் குளம் அமைக்கும் பொருட்டு கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு குத்தகைக்கு முன்நிறுத்தி முன்நுழைவு அனுமதி வழங்கி அரசாணை (நிலை) எண்.**69**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.**2)** துறை, நாள்.**13.06.2014** பிறப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து **31.03.2015**ல் தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சித் துறை கடிதத்தின் படி, அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள புல எண்கள் / அளவீடுகள் வித்தியாசப்படுவதாகவும், கட்டுமானப் பணிக்கு நீளவாக்கில் உள்ள நிலப்பரப்பில் கட்டுமானம் கட்ட இயலாது என்பதால் சதுர வடியில் நில உத்தேசத்திற்கும், பிரதான சாலையிலிருந்து அணுகு சாலையும் ஏற்படுத்தி திருத்திய அரசாணை பெற்றுத் தர கோரப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் திருத்திய வரைபடம் மற்றும் மன்றத்தீர்மானம் ஆகியவை **25.11.2015** மற்றும் **28.02.2018**ம் தேதிய இவ்வலுவலக கடிதத்தின்படி திருத்திய அரசாணையை எதிர்நோக்கி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் நில நிர்வாகம் அவர்கள் **20.08.2018** அன்று நடைபெற்ற கூட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலுவலர், சிறைத் துறை அதிகாரிகள் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் **24.08.2018** அன்று சிறைத் துறை அதிகாரிகள் தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சித் துறை அதிகாரிகள் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி அதிகாரிகளுடன் இணைந்து நேராய்வு செய்து தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சித் துறைக்கான நில ஒதுக்கீடு மற்றும் தாவரவியல் பூங்கா அமைக்க நில ஒதுக்கீடு மேற்கொள்ள உத்திரவிடப்பட்டதன் படி, **24.08.2018** அன்று சிறைத் துறை அதிகாரிகள் தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சித் துறை அதிகாரிகள் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி அதிகாரிகளுடன் இணைந்து நேராய்வு செய்யப்பட்டது.

இது தொடர்பாக அரசு கூடுதல் முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் (நில நிர்வாகம்) அவர்களின் தலைமையில் **07.01.2019** அன்று நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில், **24.08.2019** சம்பந்தப்பட்ட துறைகளுடன் கூட்டாய்வு மேற்கொண்டதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு நிலங்களை ஒதுக்கீடு செய்ய அனைத்து துறையினரும் ஏற்றுக் கொண்டதாக கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதை தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் அவர்களை முழுமையான நிலஉரிமை மாற்ற பிரேரணையை கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் மற்றும் அனைத்து ஆவணங்களுடன் அனுப்பிவைக்குமாறு கடித எண்.V1/33356/2010, நாள்.**18.07.2019**ன் படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண் | துறை வாரியாக மேற்கொள்ளப்பட்டநிலபகிர்வு | மொத்தம் நிலபரப்பு ஏக்கரில் |
|---|---|---|
| 1. | விளையாட்டுத் துறை | 5.63 |
| 2. | கோயம்புத்தூர் மாநகராட்சி செம்மொழி பூங்கா | 22.22 |
| 3. | சிறைத் துறை | 17.79 |
| | மொத்தம் | 45.64 |

இந்நிலையில் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் விளையாட்டுத் துறை அதிகாரிகளுடன் **30.07.2019** தேதியில் நேராய்வு மேற்கொள்ளப்பட்டதில், தற்பொழுது நிலையில் உள்ள நேரு விளையாட்டு அரங்கம் அருகிலேயே உத்தேசிக்கப்பட்டுள்ள **5.63** ஏக்கர் நிலப்பரப்பினை வழங்க வழிவகை செய்யுமாறு விளையாட்டுத்துறை அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்தனர். ஆகவே, இதன் அடிப்படையில் விளையாட்டு அரங்கம் அருகில் அமைந்துள்ள வ.உ.சி மைதானத்தில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான நகரளவை எண்–**923/1** பகுதி, வார்டு எண்–**1**, பிளாக் எண்–**13**ல் உள்ள பூங்கா நிலத்தில் **5.63** ஏக்கர் நிலப்பரப்பினை வழங்கவும், ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள மிருககாட்சி சாலை இடத்திற்கு கூடுதலாக தேவைப்படும் **25** ஏக்கர் நிலப்பரப்பிற்கு தற்பொழுது விளையாட்டுத் துறை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி செம்மொழி பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட **5.63** + **22.22** = **27.85** ஏக்கர் பரப்பளவு நிலத்தில் மிருககாட்சி சாலை விரிவாக்கம் மற்றும் நவீன முறையில் சிறப்பு பூங்கா அமைக்கவும் மாவட்ட ஆட்சியர் அவர்களை அரசுக்கு பரிந்துரைக்க கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கலாம். உத்தரவை எதிர்நோக்கி மாமன்ற பொருள் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.**8336 /2011**/எம்.எச்.**5**,

---